1995 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதுவாக இருந்தாலும் என்னிடம் முன்அறிவிப்புக் கொடுக்க வேண்டும் என்கிற முறையை நாம் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். அந்த முறையை மீறி இப்போது நடந்து கொள்வதற்கு இயலாது. (குறுக்கீடு) நீங்கள் தகவல் கோருவதாக இருந்தால், என்னிடம் முன்கூட்டியே அனுமதி கேட்டிருக்க வேண்டும். அந்த முறையை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற, முன்கூட்டியே என்னிடம் அனுமதி பெற்று எழுப்ப வேண்டும் என்கிற அந்த முறையைப் பின்பற்றுங்கள் என்றுதான் சொல்கிறேன்; உட்காருங்கள்.

முற்பகல் 11-20

திரு. சி. ஞானசேகரன்: தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். இதிலே வேண்டாம். (குறுக்கீடு) பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. போளூர் வரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரு நிமிடம் அவகாசம் அளிக்க வேண்டும். பொடவூர் கிராமத்தில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை வேறுவகையில் நீங்கள் எழுப்புங்கள்; இப்போது முடியாது. (குறுக்கீடு) நோட்டீஸ் கொடுத்து விட்டுப் பேசுங்கள்.

5. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9, உள்விதி (1)-ன் கீழ், கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் ஒன்பதாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்:

திரு. வி.பி. சந்திரசேகர்

திரு. எஸ். அன்பழகன்

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்

திரு. எச். எம். ராஜு

திரு. ஜி. பழனிசாமி

திரு. எஸ். ஆண்டித் தேவர்